செ.வெ எண்:39/2020 நாள்:23.09.2020

**சேலம் மாவட்டத்தில் பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 451 சத்துணவு அமைப்பாளர்கள், 138 சமையலர்கள் மற்றும் 981 சமையல் உதவியாளர்கள் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப, அவர்கள் தகவல்.**

---

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய/ நகராட்சி/ மாநகராட்சிகளுக்குட்பட்ட பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| காலிப்பணியிட விபரம் | | |
|---|---|---|
| **அமைப்பாளர்** | **சமையலர்** | **சமையல் உதவியாளர்** |
| **451** | **138** | **981** |

மேற்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் (பெண்கள் மட்டும்) விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்கள் நகல்களுடன் பூர்த்தி செய்து தங்களுக்கு தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்/ நகராட்சி/ மாநகராட்சி அலுவலகங்களில் 24.09.2020 முதல் 30.09.2020 மாலை 5.00 மணிக்குள் நேரிலோ, அல்லது பதிவு தபால் மூலமாகவோ தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்கள்/நகராட்சிகள்/மாநகராட்சி அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனவே, 30.09.2020 மாலை 5.00 மணிக்கு பிறகு காலதாமதமாக தபால் மூலம் மற்றும் நேரடியாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், ஊராட்சி ஒன்றியங்கள் / நகராட்சிகள் / மாநகராட்சி அலுவலகங்களில் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம். சேலம் மாவட்ட இணையதளத்திலும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>பள்ளி சத்துணவு மைய அமைப்பாளர் பதவிக்கான தகுதிகள்:–</u>**

(பெண் விண்ணப்பதாரர் மட்டுமே விண்ணப்பிக்கப்படவேண்டும்)

**1) <u>கல்வித்தகுதி</u>**

- ✓ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- ✓ பழங்குடியினர் (ST) எட்டாவது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் (தேர்ச்சி/தோல்வி)

**2) <u>வயது வரம்பு (01.09.2020 ஆம் நாளன்று)</u>**

- ✓ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதராகவும் இருக்க வேண்டும்.
- ✓ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதாவராகவும் இருக்க வேண்டும்.

- ✓ விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ✓ மாற்றுத் திறனாளிகளுக்கு 43 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

3) <u>பிற தகுதிகள்</u>

- ✓ நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.
- ✓ சத்துணவு மைய கணக்குகளை தனியே பராமரிக்கும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

4) மாற்றுத் திறனாளிகளுக்கு அமைப்பாளர் பணியிடத்திற்கு 4% சதவீதம் ஒதுக்கீடு அனுமதிக்கப்படும்.

<u>பள்ளி சத்துணவு மைய சமையலர் பதவிக்கான தகுதிகள்:–</u>

(பெண் விண்ணப்பதாரர் மட்டுமே விண்ணப்பிக்கப்படவேண்டும்)

<u>கல்வித்தகுதி</u>

- ✓ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் எட்டாம் வகுப்பு தேர்ச்சி/தேர்ச்சி பெறாதவர்.
- ✓ பழங்குடியினர் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

<u>வயது வரம்பு (01.09.2020 ஆம் நாளன்று)</u>

- ✓ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதராகவும் இருக்க வேண்டும்.
- ✓ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதாவராகவும் இருக்க வேண்டும்.
- ✓ விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

<u>தூரச் சுற்றளவு</u>

- ✓ நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்புக்குக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.

<u>பள்ளி சத்துணவு மைய சமையல் உதவியாளர் பதவிக்கான தகுதிகள்:–</u>

(பெண் விண்ணப்பதாரர் மட்டுமே விண்ணப்பிக்கப்படவேண்டும்)

✓ <u>கல்வித்தகுதி</u>

- ✓ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி/தேர்ச்சி பெறாதவர்.
- ✓ பழங்குடியினர் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

✓ <u>வயது வரம்பு (01.09.2020 ஆம் நாளன்று)</u>

- ✓ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதராகவும் இருக்க வேண்டும்.
- ✓ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதாவராகவும் இருக்க வேண்டும்.
- ✓ விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

<u>தூரச் சுற்றளவு</u>

- ✓ நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்புக்குக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.

**<u>சான்றுகள் இணைக்கப்பட வேண்டிய விபரம்:–</u>**

(விண்ணப்பத்துடன் சான்றிதழ் நகல் மட்டும் இணைக்க வேண்டும். நேர்முக தேர்வின் போது அசல் சான்றுகள் காண்பிக்கப்படவேண்டும்)

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ் (T.C) ஜெராக்ஸ் நகல்.
2. கல்வித்தகுதிச் சான்று நகல்.
3. மதிப்பெண் சான்று நகல்.
4. இருப்பிடச் சான்று நகல்.
5. சாதிச் சான்று நகல்.
6. விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களாக இருப்பின் உரிய அலுவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் நகல்.
7. மாற்றுத்திறனாளிகளாக இருப்பின், அதற்கான சான்றிதழ் நகல்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒம்/– திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
சேலம் மாவட்டம்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.